**CC.NO.27/2022 PW-1**

நாள் : 23.02.2026

பெயர் : பூமணி

க/பெ : இளகேஸ்வரன்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார் நான் கொடுத்தேனா என்றால் சரிதான். இந்த புகார் மனுவை நான் எழுதவில்லை ரமேஷ் என்ற வழக்கறிஞர் எழுதினாரா என்றால் சரிதான். அதில் நான் கையெழுத்து செய்தேனா என்றால் சரிதான். புகாரில் வழக்கறிஞர் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் இல்லை. தெரியாது. எனக்கு எழுத, படிக்க தெயுமா என்றால் கூட்டி கூட்டி படிக்க தெரியும். எந்த நாள் பிரச்சனை நடந்தது, எப்போது புகார் அளித்தேன் என்றால் 05.03.2022 அன்று சம்பவம் நடந்தது. அன்றே காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். அன்றை தினமே போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. மறுநாள் 06.03.2022 அன்று விசாரணை செய்தார்கள்.

அதன் பிறகு என்னை போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் ஆமாம். 09.03.2022 அன்று விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள். எங்களை புகாரை வாபஸ் பெற சொன்னார்கள் மாலை வரை காத்திருந்தோம். அதன் பின்பு எங்களிடமிருந்த சாட்சியத்தை கேசெட்டாக போட்டு எடுத்து வர சொன்னார்கள்.

அதன் பிறகு அந்த கேசெட்டை காவல் நிலையத்தில் எப்போது ஒப்படைத்தீர்கள் என்றால் அன்றைய தினமே இரவு 6.30 மணிக்கு மேல் ஆகிவிட்டது. அதன் பிறகு அதை வாங்கிக்கொண்டு எங்களை அனுப்பிவிட்டார்கள். அந்த ரிப்போட்டில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் 05.03.2022 அன்று கொடுத்த புகாரை எடுத்துவிட்டு 09.03.2022 அன்று ஒரு புகாரை ரமேஷ் வழக்கறிஞர் எழுதி என்னிடம்

கையொப்பம் வாங்கினார்கள். அதுதான் என்னிடம் காட்டப்படும **அ.சா.ஆ.1** புகார் ஆகும். 09.03.2022 அன்று எழுதப்பட்ட புகாரில் சிடி பதிவு காவல் நிலையத்தில் ஒப்படைத்ததை குறிப்பிட்டார்களா என்றால் குறிப்பிட்டதாக தான் சொன்னார்கள். அவ்வாறு எந்த குறிப்பும் இல்லை என்றால் தெரியாது.

சிடி பதிவு எந்த செல்போனிலிருந்து இறக்கம் செய்யப்பட்டது அந்த போனின் IMEI எண் மற்றும் அதன் மாடல் என்ன என்பதையும், எந்த கடையில் செல்போனிலிருந்து சிடி பதிவு செய்யப்பட்டது என்றால் எனது vivo போனிலிருந்து சண்டை நடக்கும்போது எனது மகள் வீடியோ எடுத்தாள். அதனை CD ஆக கொடுக்க சொன்னார்கள். ஆட்டோவில் தேடி பார்த்து ஏதோ ஒரு கடையில் அந்த பதிவை CD–ல் ஏற்றி எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தோம்.

எனது மகள் தான் அந்த வீடியோவை எடுத்தாள் என்பதற்காக போலீசார் அவளை சாட்சியாக விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. சம்பவ இடம் குடியிருப்பு பகுதி என்றால் சரிதான். எத்தனை நபர்கள் இந்த சம்பவத்தை பார்த்தார்களா என்றால் ஐந்து, ஆறு நபர்கள் இருந்தார்கள். மற்றவர்கள் கழனி வேலைக்கு சென்றிருந்தார்கள். எனக்கு சார்பாக சாட்சி அளித்த வளர்மதியை தவிர மற்ற நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சியம் அளித்த வளர்மதி எனது நண்பர் என்றால் இல்லை. அவர் எனது எதிர் வீட்டில் வாடைகைக்கு குடியிருந்தார். சாட்சி குமார் வளர்மதியின் கணவர் என்றால் சரிதான். சாட்சி சங்கர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எங்களை அடித்தவர்களின் உறவினர்.

எனது முதன்மை சாட்சியத்தில் நாங்கள் வெளியூரிலிருந்து வந்து அங்கு குடிபுகுந்தோம். அந்த தெருவில் குடியிருப்பவர்கள் நாங்கள் சென்றதிலிருந்தே எங்களுக்கு பிரச்சனை செய்து வந்தார்கள் என்ற

நீதிமன்ற முதல் விசாரணையில் கூறியுள்ளேன். அதுபோல் போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். எதிரிகளுக்கும் எனக்கும் முதலில் பிரச்சனை இல்லை என்றாலும், எனக்கும் ஜெயலட்சுமிக்கும் தான் பிரச்சனை என்றால் எனக்கும் ஜெயலட்சுமிக்கும் பிரச்சனை இருந்தது. தற்போது சாட்சி ஜெயலட்சுமியுடன் பிரச்சனை இல்லை என்றும், எதிரிகள் தான் வந்து அடித்தார்கள் என்று கூறுகிறார். எதிரி எனக்கும் ஜெயலட்சுமிக்கும் தான் பிரச்சனை இருந்தது என்று அதை தடுக்க சென்றதால் தான் அவர் மீது புகார் அளித்ததாக கூறுகிறார் என்றால் சரியல்ல.

இரண்டு மற்றும் மூன்றாம் எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் 4.30 மணிக்கு நடந்ததாக கூறியுள்ளேன். எவ்வளவு நேரம் நடந்தது என்றால் 1/2 மணிநேரம் நடந்தது. பிரச்சனைக்கு ஆரம்பமே நான் அன்று ஜெயலட்சுமியின் இரண்டு ஊனமுற்ற குழந்தைகளை போய் கேலி செய்ததால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதுபோல் ஒன்றாம் எதிரிக்கு ஒரு ஊனமுற்ற குழந்தை பிறந்து இறந்துவிட்டது என்றாலும், ஜெயலட்சுமிக்கு பிறந்ததை போலவே மீண்டும் எதிரிக்கு ஊனமுற்ற குழந்தைதான் பிறக்கும் என்று நான் பேசியததால் தான் பிரச்சனைக்கு ஆரம்பம் என்றாலும் இல்லை. எதிரி செருப்பால் அடித்ததாக கூறுகிறேன். அந்த செருப்பின் அடையாளம் கூறியுள்ளேனா என்றால் இல்லை.

தாக்கியதாக சொல்லப்படும் செருப்பினை போலீசார் கைப்பற்றினார்களா என்றாலும், நான் போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றாலும் இல்லை. எதிரிகள் தாக்கியதற்கு நான் மருத்துமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் இல்லை. இந்நீதிமன்ற விசாரணையில் தலை முடி இழுத்து, எனது துணி கிழிந்ததாக கூறியுள்ளேன். அதை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனக்கு துணி கிழிந்துவிட்டது என்பதற்கு அந்த துணியை போலீசாரிடம் காண்பித்து

அவர்களிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் 05.03.2022 அன்று கொடுத்த புகாரை மாற்றி 09.03.2022 அன்று வேறொரு புகார் வழக்கறிஞர் மூலமாக எழுதப்பட்டது என்று கூறுகிறேன். ஆனால் முதன்மை விசாரணையில் அவ்வாறு ஏன் கூறவில்லை என்றால் அதிலுள்ளவாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்ற வழக்கறிஞர் சொன்னார் அதனால் கூறினேன்.

எனக்கும் எதிரிகளுக்கும் சண்டை நடக்கவில்லை என்றாலும், எனக்கும் ஜெயலட்சுமிக்கும் பிரச்சனை என்றாலும் சரியல்ல. எதிரிகள் எங்கள் வீட்டின் எதிரில் உள்ளார்கள் என்றாலும் நான் அவர்களிடம் குழந்தை சம்பந்தமாக பிரச்சனை செய்தேன் என்றாலும், அதற்கு எதிரிகள் என்மீது புகார் அளிப்பதற்கு முன்பே நான் அவர்கள் மீது புகார் அளிக்கவேண்டும் என்று எனது வழக்கறிஞர் அறிவுறுத்தியதன் பேரில் நான் இந்த புகாரை அளித்தேன் என்றாலும் சரியல்ல.

நான் அளித்த சிடி ல் உள்ள பதிவு நான் மார்பிங் செய்து தாக்கல் செய்தது என்றாலும், அதில் உள்ள பதிவு உண்மையல்ல என்றாலும் சரியல்ல. ஒன்றாம் எதிரி எனக்கும் ஜெயலட்சுமிக்கும் நடந்த பிரச்சனை தடுக்கதான் வந்தார்கள் என்றாலும், இரண்டு, மூன்று எதிரிகள் சம்பவ சமயத்தில் அங்கு இல்லை என்றாலும் சரியல்ல.

**CC.NO.27/2022 PW-2**

நாள் : 23.02.2026

பெயர் : வளர்மதி

க/பெ : குமார்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**அ.சா.1** என் நண்பர் என்றால் இல்லை. எனது உறவினர் ஆவார். நாங்கள் எங்கு சென்றாலும் இரண்டு பேர் ஒன்றாக தான் செல்வோமா என்றால் சரிதான். **அ.சா.1** ன் கணவர் மிலிடிரில் இருப்பதால் அவரது கணவர் இல்லாத சமயத்தில் நான்தான் அவருக்கு துணையாக இருப்பேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சி கூறிய குமார் எனது கணவர் என்றால் சரிதான். எனது கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் மேஸ்திரி வேலை செய்கிறார்.

இந்த வழக்கின் சாட்சி சங்கர் யார் என்றால் எனக்கு தெரியாது. **அ.சா.1** பூமணி அவர் புகார் அளிக்கும் போது நான் உடன் சென்றேனா என்றால் சரிதான். 05.03.2022 அன்றே நான் காவல் நிலையத்திற்கு நானும், **அ.சா.1** உடன் உடன்சென்றிருந்தேன் என்றால் சரிதான். அப்போது போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. அதன் பிறகும் போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். **அ.சா.1** கூறிதான் நீதிமன்றத்தில் முதன்மை சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான்.

**CC.NO.27/2022 PW-5**

நாள் : 23.02.2026

பெயர் : இருசப்பன்

க/பெ : லட்சுமணன்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**அ.சா.1** எனது காவல் நிலையத்தில் எந்த தேதியில் வந்து புகார் அளித்தார் என்றால் 09.03.2022 அன்று புகார் அளித்தார். அந்த புகார் மனுவை 5 நாள் கால தாமதமாக அளித்துள்ளார்களா என்றால் சரிதான். இந்த காலதாமததிற்கான காரணத்தை அவர்கள் அளித்த புகார் மனுவில் கூறியுள்ளார்களா என்றால் இல்லை. **அ.சா.1** தனது குறுக்கு விசாரணையில் 05.03.2022 அன்றே தான் புகார் அளித்துவிட்டதாக கூறுயுள்ளார் என்றால் சரியல்ல. **அ.சா.1** அளித்த புகாரில் அவர் குறுந்தகடு இணைத்து சமர்பித்தாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. இந்த சம்பவத்தை எத்தனை நபர்கள் பார்த்தார்கள் என்று விசாரணையில் கூறினார்களா என்றால் இல்லை. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் குடியிருப்பு பகுதியில் உள்ள யாரையும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் தான் இந்த வழக்கில் முதல் தகவலை பதிவு செய்து சம்பவ இடம் சென்று பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன் என்றால் சரிதான்.

நான் தயார் செய்த பார்வை மகசரில் நேரம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் புகாரை பெற்ற நேரம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தயார் செய்த கைப்பற்றுதல் மகசர் சம்பவ இடத்தில் தயார் செய்து கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அம்மூர் பேருந்து நிலையம் அருகே தான் கைப்பற்றுதல் மகசர் **அ.சா.1** இடமிருந்து தான் பெறப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 குறுக்கு விசாரணையில் 09.03.2022 அன்றே தான் CD யை காவல்

நிலையத்தில் சென்று ஒப்படைத்ததாக கூறுகிறார் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் ஒன்று முதல் நான்கு வரையிலான சாட்சிகளையும், வாக்குமூலத்தை நான் காவல் நிலையத்தில் தான் பெற்றேனா என்றால் சரிதான். இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்திலே தயார் செய்யப்பட்டது என்றால் கைப்பற்றுதல் மகசர் மற்றும் பார்வை மகசர் தவிர அனைத்தும் காவல் நிலையத்திலே தயார் செய்யப்பட்டது. இந்த வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தாரா என்றால் ஆமாம். எப்போது என்றால் 09.03.2022 அன்றே என்னை விசாரணை செய்தார்.

எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. இந்த வழக்கில் கூறியுள்ள குற்ற செயலில் ஈடுபடவில்லை. **அ.சா.1** கொடுத்தாக சொல்லப்படும் புகார் பொய்யான புகார் என்றும், **அ.சா.1** வருபுறுத்தலின் பேரில் அவர் சொல்லாத சங்கதிகள் அனைத்தும் நானே புகார் மனுவாக எழுதி **அ.சா.1யி**டம் கையொப்பம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இந்த வழக்கிற்கான அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்திலே தயார் செய்யப்பட்டு நாங்கள் கைப்பற்றியதாக சொல்லப்படும் குறுந்தகடு இந்த வழக்கை மிகைப்படுத்த வேண்டி நானே மாற்றம் செய்து இவ்வழக்கின் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரி மீது சரிவர விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யமால் உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்துவிட்டேன்என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

Digitally signed by SADASIVAM POORNIMA
DN: cn=SADASIVAM POORNIMA, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.